குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 164/2013

அ.சா. 4

2024–ம் ஆண்டு அக்டோபர் 01–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேசன் | ஜாதி | |
| தந்தை பெயர் | சீரங்கன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.43 மணி,

Accused Ganesan absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. K.Sivakumar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் பல்பாக்கியில் குடியிந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2013 ம் ஆண்டு நான் முத்துநாயக்கன்பட்டிக்கு வேலைக்கு சென்ற போது பாகல்பட்டி ஏரிக்ரையில் ஒருவர் சாலையில் மண் ரோட்டில் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து போன் பேசிக் கொண்டு இருந்த போது அருகில் ஒரு நபர் இருந்தார். அப்போது லாரி ஒன்று சேலம் ரோட்டில் வந்தது. அது அந்த சாலையின் வலைவான பகுதியில் வந்த போது சாய்ந்துவிட்டது. லாரி சாய்ந்ததில் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து போன் பேசிக் கொண்டு இருந்த நபர் மற்றும் அவருடன் இருந்த நபர் இருவருக்கும் லாரி சாய்ந்து அழுத்தியதில் சம்பவ இடத்திலேயே நசுங்கி இறந்துவிட்டார்கள்.

2. விபத்து ஏற்படுத்திய லாரி கர்நாடகா மாநிலத்தின் பதிவெண் உடையது. ஆனால் அதன் முழு பதிவெண் தெரியாது. விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. அதன் பின்பு போலீசார் வந்தார்கள். விபத்தில் இறந்த நபர் அமர்ந்து இருந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியாது. என்னை போலீசார் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

3. நான் கட்டிட கூலி வேலைக்கு பல்பாக்கியில் இருந்து சேலம் வேலைக்கு சென்று வருவேன். நான் ஓமலூர் – மாமாங்கம் – கரும்பாலை வழியாக தான் சேலம் சென்று வருவேன் என்றால் சரி. விபத்தில் இறந்த இளங்கோ, குமாரின் உறவினர்கள் என்றால் சரி. சம்பவம் பாகல்பட்டி ஏரிக்கரை அருகே நடந்தது. பாகல்பட்டி ஏரிக்கரைக்கு முன்பு அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரி. அங்கு இரண்டு வேகத்தடைகள் உள்ளது என்றால் சரி. சம்பவ இடத்தில் இருந்து வேகத்தடை சுமார் 30 அடி தூரத்தில் உள்ளது என்றால் சரி.

4. முத்துநாயக்கன்பட்டியில் இருந்து சேலம் செல்ல வேண்டும் என்றால் மேற்படி வேகத்தடையை தாண்டி தான் செல்ல முடியும் என்றால் சரி. நானும் சீனிவாசனும் வேலைக்கு சென்று கொண்டு இருந்த போது விபத்து நடந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. சீனிவாசனை போலீசார் விசாரித்தார்கள். விபத்தை சுமார் 200 அடி தூரத்தில் இருந்து பார்த்தேன் என்றால் சரி. விபத்து ரோட்டில் தான் நடந்தது என்றால் சரி.

5. விபத்தில் இறந்தவர்கள் எனது உறவினர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரி பார்த்தேன். நான் வேலைக்கு சென்ற வீட்டின் உரிமையாளர் பெயர் எனக்கு தெரியவில்லை. அந்த வீடு பாகல்பட்டி தாண்டி பெருமாள் கோவில் அருகே உள்ளது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.57 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.